T-UN-100

லோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ்

கவிச்சக்ரவர்த்தி

ஒட்டக் கூத்தன்

1933 [As. 8

உ

கவிச் சக்கரவர்த்தி

ஒட்டக் கூத்தன்

இயற்றிய

குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்

வேல்ஸ் இளவரசரிடம் கிள்ளாத்துப் பெற்றவரும்,

திருஐயாறு அரசினர் கல்லூரி தமிழ் விரிவுரையாளருமான

L. உலகநாத பிள்ளை

பரிசோதித்தது.

SADHASIVAN BROS.

Mylapore :: Madras.

பொருளடக்கம்

முன்னுரை	ii
பிள்ளைத்தமிழ் நூல்	1
அனுபந்தம்	50
பாட்டு முதற்குறிப்பு	52
சொல்லகராதி	53

முன்னுரை

குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ் என்ற இந்த நூல் சரித ஆராய்ச்சிக்கு இன்றியமையாத குறிப்புக்களும், சொற்பொலிவும், பொருட்பொலிவும் பெற்றுச் சிறந்து விளங்குவது. இதனை இயற்றியவர் ஒட்டக்கூத்தராவார். இப் பிள்ளைத்தமிழ் பெற்றோன் சோழர் மரபிற் காணப்படும் குலோத்துங்கன் என்னும் பெயருடையார் மூவருள் எவர் என்று ஆராயுமிடத்து, "பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி கவிச்சக்ரவர்த்தி பரவச்-செஞ்சே வகஞ்செய்த சோழன் திருப்பெயர செங்கீரை யாடியருளே" எனவும் "கோமன்னன் புவனதரன் விக்கிரம சோழன் குலமதலை குலோத்துங்க சோழனைக் காத்தளிக்க" எனவும் இந்நூற் செங்கீரைப் பருவத்தும் காப்புப் பருவத்தும் முறையே வந்தவாற்றானே, கலிங்கத்துப் பரணி பெற்ற பெருமானாகிய அபயன் பேரனும், விக்கிரம சோழன் மகனுமாகிய இரண்டாங் குலோத்துங்கன் என்றறியலாம்.

இவன் இப் பிள்ளைத்தமிழ் மாலையேயன்றிக் கூத்தர்பால் உலாவும் பெற்றவன் என்பது

"கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலா
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையொடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனும்"

எனச் சங்கரசோழ னுலாவில் வருதலால் தெளியப்படும்.

இன்னும்,

"சிற்றம்பலமுந் திருந்துபே ரம்பலமு
மற்றும் பலபல மண்டபமுஞ்—சுற்றிய

மாளிகையும் பீடிகையும் மண்டபமுங் கோபுரமுஞ்
சூளிகையு மத்தெருவுந் தோரணமு—மாளுடையான்
கோயிற் றிருக்காமக் கோட்டமு மக்கோயில்
வாயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்
பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து
முன்னர்க் கடலகத்தின் மூழ்குவித்த—சென்னி"

என இராசராசன் உலாக் கூறியவாற்றால் இவன் சிவனடிக்கண் பேரன்புடையோன், சிற்றம்பலம் பேரம்பலம் திருக்காமக் கோட்டம் முதலிய கோயிற்றிருப்பணிகள் பல இயற்றுவித்த சீரியோன் என்பது விளங்கும்.

இப் பிள்ளைத்தமிழ் ஏடு, இடந்தொறும் சிதைவும் பிறழ்ச்சியுங் கொண்டிருத்தலின் வேறு சில ஏடுகள் பெற்றுச் செப்பஞ் செய்து வெளியிட இதுகாறும் பொறுத்திருந்தேன்; ஒன்றேனும் கிடைத்திலது. உள்ள ஏடும் செல்லுக் குணவாயொழிகின்றமையின், இதனை உள்ளவாறு வெளியிடல் நலமெனத் துணிந்து பதிக்கத் தொடங்கினேன். ஆகலான் குற்றங்களைந்து குறை பெய்து வாசிப்பது கற்றறிந்த மாந்தர் கடனும்.

இந்நூலில் 101 பாட்டு அச்சேறிய பின்னர் சேது சமஸ்தான வித்துவான், பாஷாகவி சேகரர் ஸ்ரீ. ரா. ராகவையங்காரவர்கள் தாம் அரிதிற் பெற்று வைத்திருந்த செய்யுட்கள் சிலவற்றை யுதவினார்கள். அவை சிதைந்தனவாயினும் பின்னொருக்கால் நன்மை பயத்தல் கூடுமென எண்ணி இறுதியிற் சேர்த்துள்ளேன். அவர்கட்கும், இதனை விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்திய சதாசிவன் சகோதரர்களுக்கும் தமிழுலகம் மிக்க கடப்பாடுடையது.

ஸ்ரீமுக, கார்திகை.
1933ஞு டிசம்பர்மீ

L. உலகநாத பிள்ளை.

உ

குலோத்துங்கன்

பிள்ளைத் தமிழ்

க. காப்புப் பருவம்.

கணபதி காப்பு

போங்கு புரத்ரயம் வெந்தழ லிற்புக
வம்பு திரித்தவர் தம்
பூதர முகடுக மூக மிருகபதி
பொடிபட [1]விடறியடும்
பைங்கத லிக்கனி மென்பல விற்சுளை
யன்பொ டளிப்பவர் தம்
படுதுயர் பொடிபட வடிபடு முழுநிரை
மனைதொறு [2]மு[ன்ப]விருந்
திங்கள் வெருக்கொள வைந்தலை வெக்கைகள்
சிந்து பணிக்கரசன்
றிடுத[ர] மணிமுடி யடிபடு முழுதிரை
திசைதொறு முதிரவிழுங்
கங்கை குதித்திடு [3]கண்கனி யப்படர்
செஞ்சடை யப்பர்தருங்
கடதட முகபட வரகட கரிமுக
கணபதி கழலிணையே.

(பிரதி) 1. விடறியதும். 2. மு[ன்ப]விழுங். 3. கண்களியம்படர்.

சிவபெருமான்

1. பூமன்னு பொழிலேழுங் கடலேழுங் கடவுட்
பொருப்பேழு மெனநிலவு மதுரைக்கும் [1]புகார்க்குங்
கோமன்னன் புவனதரன் விக்கிரம சோழன்
குலமதலை குலோத்துங்க சோழனைக்காத் தளிக்க
தேமன்னு தாமரையாள் மகிழ்ந்திருக்கு மார்பிற்
றிருமாலு நான்முகனு மிருமருங்குஞ் சிறந்து
மாமன்னு மணிவரையும் பொன்வரையுங் கிளைத்த
மாணிக்க வரையனைய வானிடைக்கற் பகமே. க.

2. இடைவி டாப்பொழி லெழிலி காத்தவ
னிளைய கோற்றொடிசேய்
[இரு]கு லோத்தமன் மகன்வ ரோத்தம
னேதிரி லாப்பெருமாள்
படியி னற்கவி பயில வாய்ப்பவர்
பரசு [2]பார்க்கதிபன்
பதும வீட்டுறை பரம னற்பெறு
[3]பரிசு காப்பவர்தாம்
வடுவில் காப்பிய மதுர வாய்ப்பொருண்
மரபு வீட்டியதால்
வழுதி யாட்சியை வளவன் மாற்றிட
மதுரை கூப்பிடுநா
ளடைவு கோத்தன வமுத சூத்திர
மறுப தாய்ச்சமைநூ
லமரர் கீழ்ப்பட வறிஞர் மேற்பட
[4]வருளு மூர்த்திகளே. உ.

(பிரதி) 1. புகார் நகர்க்குங். 2. பாத்திபன். 3. பரசு. 4 வருள.

பிரமன்

3. வெறிக்குங் குமத்தோள் விசயா பரண
னபய னுபய குலதீபன்
விபுதர் வெருவு சமர்க்களத்தில்
வேழப் பொருப்பு களின்மருப்புத்
தறிக்குஞ் சுடர்வாள் வய[வ] ரமல
னதுலன் சயவிக் ரமசோழன்
சத்தா பரணக[1] ரீசனைக்காத்
தளிக்கச் சனகா திகள்ஞானப்
பொறிக்குந் தெரியாச் செந்தா மரையும்
வெண்டா மரையும் பப்பாதிப்
பொற்று மரையுங் கடவுள்வெள்ளி
நற்று மரையு மாகப்போந்
தெறிக்குந் தனது செஞ்சோ தியுந்தன்
றேவி வெண்சோ தியுங்கொள்ள
விருபோ தகத்து மொருபோ தகலா
தெல்லா யுகத்து மிருப்பாரே. ௩.

இரவி

4. உதியர் மைந்தருஞ் செழியர் மக்களுஞ்
சிங்க ளேசர்தம் புதல்வரு
முதகை கூடலூ ரனுரை யென்றுதம்
பாடி வீடுவிட் டோடிவீழ்
அதிக ரங்கமுங் கொங்க ரங்கமு
மடைய வெந்தெழப் படையெழு
மதுல னெங்கள்கோ னரசர்கோமக
னபய னைப்புரந் தருளுமாற்

(பிரதி) 1. பரணகக.

கதிய மைந்தபைங் குரநி லத்திடா
கொண்ட கால்விடா நுகமெடா
கண்ணி மைப்புறு வளையு திர்ப்புறு
கட்டி விட்டதா ரசைவுறு
பொதிய விழ்ந்தமந் தார [1]நாலுறு
விவைது ரங்கவோ வியமெனப்
புவியு மும்பரும் புகழு மேழ்பெரும்
புரவி [யி]வருமே ரிரவியே. ௪.

ஐங்கரன்

5. சாலைப்போர் வடகொப்பத் தெடுத்தபோ ரென்னத்
தனிக்கடந்தான் றிருப்புதல்வி தருணமட மாது
சேலைப்போர் கடந்தவிழித் [2]திரிபுவன முடையா
டிருமகற்கு மகனெங்கள் செம்பியனைக் காக்க
காலைப்போய் மதுகரங்கள் கிளைத்தும்பை திளைத்துக்
கடும்பகற்போ யிருகரடக் கடக்கலுழி கவர்ந்து
மாலைப்போய் மதிக்கதிர்கா லமுதெடுத்து மடுத்து
வைகறைபோய்க் கொன்றைபுகு மணிமுடிவா ரணமே.

முருகன்

6. நாவலந் தீவுமுத லேழ்பெருந் தீவுடைய
நாதனெங் கோனபயன் ஞானகெம் பீரனிசை
காவலன் கோடிபல காலமுஞ் சூழ்திகிரி
காவல்கொண் டாளவொரு காதல்கொண் டாளுவண
தூவலம் போரருவில் வேல்கடம் பாரமதி
தூரசிந் தூரகிரி தோகைகொம் பியானைகுழல்
சேவலங் கோழியிவை யாவையுந் தேவிபெறு
சீதனம் போலுடைய சேவகன் சேவடியே. ௬.

(பிரதி) 1. நாலுறு. 2. திருபுவன.

காளி

7. மைத்தடங்கண் மேலேந்து மாமதிக் கீற்றினள்
வைத்தகங்கை நீர்தேங்கு வார்சடைக் காட்டினள்
வட்டவெஞ்சு ருகான்ற வார்குழைத் தூக்கினள்
மற்றசைத்து நேர்தாழ்ந்த மூவிலைக் கூற்றினள்
பைத்தடங்கு வாய்காய்ந்த மாசுணக் காப்பினள்
பத்திகொண்டு கீழ்தாழ்ந்த பீதகக் கோக்கையள்
பச்சையந்து மாய்வேய்ந்த வாசிகைச் சூட்டினள்
பக்கநின்று தாளேந்து கோளரிப் போத்தினள்
முத்தொடுங்கு சூல்வீங்கு வால்வளைக் [1]கோட்டினம்
முத்தெறிந்த [2]போதேங்கி மீதெழக் கூப்பிட
முற்புகும்பு கார்நீங்கு நீர்புனற் கோட்டக
முட்டமண்டி மேல்வீழ்ந்த சூழ்சிறைப் பார்ப்பொடு
கொத்தடங்க மீன்மேய்ந்து கானலிற் போய்ச்சில
குக்குடங்கள் வாயோய்ந்து பாசடைக் காட்டொளி
கொட்பவிண்டு தாதேய்ந்து தாமரைக் கூட்டுறை
கொற்கை யெங்கள் ராசேந்திர சோழனைக் காக்கவே.

சத்த மாதர்

8. போலன்முக வுடைய நீட்டிய நீலக் காற்குயில்
புரமற வறிது கோட்டிய சாபக் கோற்றொடி
பொதியவிழ் முளரி மேற்புரி யோகப் பார்ப்பனி
பொழிமத வருவி தூக்கிய வேழப் போர்ப்பிடி
யிலவித ழனைய சூட்டெறி கோழிச் சூர்ப்பகை
யிதழியின் முருகு தேக்கிய வாசத் தார்க்கிளி
யிருநில மகளை யீட்டெழு மேனக் கோட்டுமை
யெனவிவ ரெழுவர் போற்றரி யாரைப் போற்றுது

(பிரதி) 1. கோட்டினன். 2. போதெங்கு.

முலகறி செறிது மூாய்ப்பெரு வாசச் சூட்டனை
யுமிழ்திரை பெருகு பாற்கட லோதச் சேர்ப்பனை
யுறுபகை முதலை வாய்ப்படும் யானைக் காத்தனை
யொருவிசை செவிலி சாத்திய பூதிக் காப்பனை
யலம்வரு குரவை யாய்ச்சியர் சேரித் தூர்த்தனை
யரவொடு பொருது தோற்றிய கோலக் கூத்தனை
யழகிய குருகு லோத்தனைத் தேரிற் கூட்டனை
யபயனை யெதிரி லாப்பெரு மாளைக் காக்கவே. அ.

முப்பத்து மூவர்

9. பாறிரட் டித்த வெருவை மீதிட்ட
பந்தரிற் சிந்து ராசனும்
பழைய சாளுக்க மக்க ளும்பட்ட
படுக ளங்கண்டு பண்டையிற்
றாறி ரட்டித்த வேழ்க லிங்கத்த
ரோடி [ட]ச் செற்ற சென்னிசேய்
சோழ கம்பீர னைப்பு ரப்பார்க
டேரக மேலெழுஞ் சூழ்நுகத்
தாறி ரட்டித்த தேரில் வேறொன்றொ
டைந்தி ரட்டித்த விடையில்செப்
பரிய வேதத்தி லாயுள் வேதத்தி
லளிகு லம்பாட வடிவிழுஞ்
சேறி ரட்டித்த கடத டப்பத்தி
யெட்டி ரட்டித்த யானையிற்
றிகழு மார்வத்த ராகி நிற்கின்ற
தேவர் முப்பத்து மூவரே. கூ.

ஐயனூர்

10. அறிந்த சிங்கள ரனந்த ருஞ்சுர
ரனேகரும் பழைய தென்னரோ
ரைவ ரும்பொருது செம்பொன் மாரியி
லனைத்து வாயிலினு மன்றபோய்
முறிந்த ஞாயிலென [1]முன்கி டந்தற
முனிந்த சென்னிமகன் மன்னர்கோன்
மூரிவா ளபய னெங்கள் செம்பொன்முகி
லைப்பு ரக்கவடி விட்டவீழ்
செறிந்த மேருசிக ரத்தொ ழுங்குதக
ரப்பு ரண்டதொரு குன்றமுஞ்
சென்ற தானவ னுடம்பு மப்படி
திறந்தி றக்கவொரு செங்கைவே
லெறிந்த தன்னுடைய தன்னை தன்னொடு
புரத்தை ய[மடத்] தமப்பனு
ரெய்த நாளமரர் செய்த பேரணியில்
யானை யேறிவரும் யாளியே. ய.

திரிபுர சுந்தரி

11. வருகரு நாடருக் கூரின் மறுகினர் கபடமுட் காறு
மலைபட வெறிவளைப் பேறு மதவரை யதனெழப் பேர
வருமுனே விளைவிளைத் தாடு மவன்மகண் மகன்முதற் பேர
னபயனே யினிதளிப் பாளு மகிலமு மிடர்கெடுப் பாளு
மிருபிறை வளையெயிற் றாலு மினவளை யணிகரத் தாலு
மிருகுழை பிறழ்புறத் தாலு மெழிலொளி யவணிடை கூட
வொருவிழி வெயிலெறித் தாலு மொருவிழி நிலவெறித் தாலு
மொருவிழி யழலெறித் தாலு மொருபுடை யிருளெறிப் பாளே.

காப்புப்பருவம் முற்றும்.

(பிரதி) 1. பழன முன்கிடந்தற.

௨. செங்கீரைப் பருவம்.

12. கல்விக்கும் [வஞ்சியர்]மரந்தைக்கு நாயக
னுறந்தைப் பிரான கிலமுங்
கண்ஞர மேருவி லெடுக்கும் புலிக்கொடி
கலிக்கள்வ னைப்பொரு துபோர்
வெல்விக்கு மானதன் மகோதைக்கு மன்னன்முடி
கொண்டான் மகற்கு மகனென்
வெற்றிக் கவித்தநில மண்ணைக் கடக்கவிகல்
விண்ணைக் கடக்க விகலிக்
கொல்விக்கும் யானைகொடு சாளுக்கி வர்க்கமற
வேளுக் கிராம மிடறிக்
கொல்லா புரம்பொருது கல்யாண மூதெயில்
பறித்தேழு கொங்கண முனைட்
செல்விக்கும் ராசாதி ராசன் திருப்பெயர
செங்கீரை யாடி யருளே
சேரா [1]பெருங்கவிகை வீரோதையா வாழி
செங்கீரை யாடி யருளே. க.

13. எரிக்குங் கனற்சோரி வங்காளர் வேழவணி
வெங்காள கூட மெனவந்
தீரட்ட மும்புரள மாரட்டர் வேழவணி
யீரேழு மெண்டி சையிலெண்
கரிக்குந் திடுக்குவர நெற்றிப் புகுந்துபடை
முற்றிப் புகுந்து பொருமக்
காலிங்க யானைகள் கடைக்கூழை யிற்கவிழ
மட்டித்த கைம்ம லைகளால்

(பிரதி) 1. பெருங்கவிதை.

விரிக்குங் கடற்குருதி வெள்ளம் பரந்துவட
விந்தா டவிப்பு டவிபோய்
வேதாள மிட்டவடி பாதாள முட்டவிழ
வீமா புரத்தொ ருசரந்
தெரிக்குஞ் சயங்கொண்ட சோழன் திருப்பெயர
செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகை வீரோதையா வாழி
செங்கீரை யாடி யருளே. உ.

14. வெஞ்சோரி நன்மதை மிதந்தோடி மேல்கடல்
சிவக்கப் புகக்கு ருதிநீர்
வெள்ளம் பரந்துபல பேரா று கீழ்கடலின்
மேன்மே னடப்ப வெதிரே
யெஞ்சா வரண்பெரிய காலிங்க மேழுமெழ
முந்நீர்க ளேழு மெனவந்
தேறித் தடுப்பமுனை மாறிக் கலிங்கமேழ்
[பாழ்]போக வென்ற வொருதன்
பஞ்சா யுதங்களி லிவன்சாது ரங்கபல
முற்றுந் தரைப்ப டவடற்
பாடற் பெரும்பரணி தேடற் கருங்கவி
கவிச்சக்ர வர்த்தி பரவச்
செஞ்சே வகஞ்செய்த சோழன் றிருப்பெயர
செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி
செங்கீரை யாடி யருளே. ௩.

15. ஏறாத வற்றமனு வேசாத செப்பநெறி
யேகாத சித்ர மதுர
மெற்றூத பேருததி வற்றூத பொன்னிநதி
யெய்யாத விந்த்ர விபவ

மாறுத மத்தகச மாராத புத்தமுத
மாடாத நிர்த்த நிலைய
மஞ்சாத புண்டரிக மெஞ்சாத யோகபல
மானாத முத்த மிழ்நல
மாறுத கற்பதரு வாராத சித்ரகவி
வாடாத வுற்ப லவன
மண்ணாத ரத்னகிரி நண்ணாத தத்வகதி
மட்காத சந்த்ர வலையம்
சீறுத சிற்றசனி தீராத பச்சைமுகில்
செங்கீரை யாடி யருளே
சேரா [1]பெருங்கவிகை வீரோதை யாவாழி
செங்கீரை யாடி யருளே. ச.

16. வானாள வொட்டரு மிரட்டரு மிலைச்சரும்
விதர்ப்பரும் வழிப்ப டவிடா
மாறுட்டரும்......வு......சனக ரும்பரத
ரும்போய் முடிந்த றமுடிப்
பூநாறு கைதவரு மாகதரு மாளுவரு
மிலாடரு மொருங்கு மடியப்
போரிற் படாததொரு பேரின்மை யால்வட
கலிங்கன் [2]புறக்கிட் டநாள்
மேனாளி மத்தருகு கட்டுண்ட வேழவணி
வெட்டுண்ட கைக்கு ருதிநீர்
விண்மே லெடுத்துவர மண்மேல் வெறுந்தனி
திகாந்தங்கண் முட்டி விரியுஞ்
சேனுப ராகமுற நிற்கும்பி ரான்மதலை
செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி
செங்கீரை யாடி யருளே. ரு.

(பிரதி) 1. பெருங்கவிதை. 2. பறக்கிப்.

17. கூடங் கொடுத்தகில லோகங் கவித்தவெளி
கோண்மண்டி மேற்குவியவோ
கோலுந்தி ரைப்பரவை நாலுங்கி
டைத்தனைய பூகங்கு லைத்தலையவோ
வாடம் பரப்பணில மாரம் படப்புலவு
மாழங் கெடச்சொ ரியவோ
வாறுங் கடற்கழியும் வேறும் பணித்தடமு
மீனந் தெவிட்டி யெழவோ
மாடங் கணித்தவெழு பாருங் குவித்ததிறை
வான்வென் றெழப்பொ தியவோ
வாருங் குலக்கிரியு மாதங்க வர்க்கமிடு
மானம்பெ ழப்பு குதவோ
சேடன் கழுத்தொசியு நாடன் றிருப்புதல்வ
செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி
செங்கீரை யாடி யருளே. சா.

18. வெங்கோ ளராவெதிர் கொடிக்கோள ராவெல்
வலத்தின் புரத்தி டையவன்
மெய்த்தூது வெல்லவொரு பொய்த்தூது சென்றொரு
பதக்குரோணி யொன்றொ டுமிகும்
சங்கோ லிடும்படைகி டந்தூதி டும்படு
களஙு.............................
.........பல வுத்தர குருக்கள்பல
யோகத் தனித்த னிபெறப்
பொங்கோ.........தனந்தரும
னேறவொரு பொய்ப்பாசனம்
போயேறி யக்குரிசில் பேரி............
தோராழி யுய்த்தி னிதவன்

செங்கோ னடாத்தவொரு முட்கோல் பிடித்தவன்
செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி
செங்கீரை யாடி யருளே. எ.

19. கோங்கைத் துவைத்துவட மண்ணைக் கட[க்கத்]
......த் திரட்ட முழறிக்
கோகன்னம் வென்றுகுட வாதாவி கொண்டுவ
....................ளுட்
கங்கைக்கு நம்முடைய கோதாவி ரிக்குநடு
வெங்கு............க்
காலிங்கர் யானைகள் கடைக்கூழை யிற்கவிழ
முன்வந்த...... ....
வெங்கைக் களிற்றுபய கும்பத்து முத்துதிர
விசையம் பணும ணியு......
விந்தை நிகர்த்துவயி [ராகரத்] தார்த்தொகுதி
விண்முட்ட வாள்கொ டுநெடுஞ்
செங்கை[களிற்றுமியுஞ்] சோழன் றிருப்பெயர
செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி
செங்கீரை யாடி யருளே. அ.

வேறு

20. தகரந றுங்குழல் சரி[தர]......
...............ராத
தரளம ரும்பிய நுதலின் விளங்கிய
சிந்தூ ரந்தீரப்

புகர............விலுஞ்சில
செம்பா கங்கோடப்
புகவிழு விஞ்சைய ரிருவரி.........
............போகப்
பகரவ ரும்படு கொலைமுலை கொண்டிடை
யெ..................
பரிபுர மங்கையர் வரையர மங்கையர்
பந்தா டுஞ்சாரற்
சிகர............குட கன்றவ
செங்கோ செங்கீரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ
செங்கோ செங்கீரை. கூ.

21. கழியவ றங்குறை துறமிட...கா
டிரும்பூ தம்பீறக்
ககனநி றைந்தெழு கடல்பரு குந்துகள்
குன்றே மூஞ்சூழப்
பொழியவி ழுங்கட களிறு புரண்டன
கண்டார் திண்டாடப்
பொருதுமு டன்கிளை முழுதுமி ழந்தவர்
நெஞ்சே நெஞ்சாகப்
பழுதில்பு ரந்தர குலதந முன்புகு
பண்டா ரம்போகப்
பரவைபெ ருந்துணி படவெயில் கொண்டெறி
கெம்பீ ரம்போகச்
செழியர்வி டுங்களி றழிய வெழும்புலி
செங்கோ செங்கீரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ
செங்கோ செங்கீரை. ய.

22. பருவவ னங்குயில் பயில்வன பைந்தளிர்
கொந்தோ டுங்கோதப்
பருகுபெ ருங்களி யளிகுல பந்திகள்
கந்தா ரம்பாடக்
கருவிவி யன்கதிர் கனியம ணந்தவர்
சந்தா பந்நீரக்
கழிகுரு கின்கிளை கலகமி டும்படி
பொங்கோ தம்போகப்
புருவநெ டுஞ்சிலை புரளவ ளைந்தொரு
வெஞ்சா பங்கோலிப்
புதுமல ரம்புகள் பொழியம ணந்தவர்
தன்றே ரென்றேறித்
தெருவின்ம தன்புகு மதலைய பங்குர
செங்கோ செங்கிரை
தினகர செம்பிய செயதர பஞ்சவ
செங்கோ செங்கீரை. கக.

செங்கீரைப்பருவம் முற்றும்.

---

௩. தாலப்பருவம்.

23. குருகு லோத்தமர் தூதா மாபூ தாதாரா
கோல வேய்க்குழ லாலே மால்சூழ் கோபாலா
வருகு பாத்திப ரானூர் கோலூ டாடாமே
யவனி காக்கு மமோகா தாலோ தாலேலோ
சுருதி நூற்றொடை மாலா காரா மேனுள்கார்
தொடரின் வீக்கிய வீரா சேரா சோழாவே
ழெருது கோட்பட மூள்போர் மார்பா தாலேலோ
வேதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. க.

24. முரியு நீர்த்துகி ர[ா] காராகீழ் காலூடே
முழுது கோட்டெழு பாரா வாரா தாலேலோ
உரிய நாற்பெரு வேதா சாரா கோல்கோடா
துலக மாக்கல மூர்மீ காமா தாலேலோ
அரிய சூர்ப்பிணை வோடே நீர்நாய் மீன்மேய்போ
தலரு நூற்றிதழ் மீதார் தாதூ தாதேதே
ணிரியல் போய்ப்பொழில் சூழ்சோ ணுடா தாலேலோ
வேதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. உ.

25. முருகு வாய்த்தது மூயே சூழ்தோ ளாவாயா
முளரி மேற்குடி வாழ்வாள் கேள்வா தாலேலோ
வரிவ ராற்பக டாண்மே லேபாய் சோணுடா
மருது சாய்த்தொரு மாவாய் கீள்வாய் தாலேலோ
வரிய மாத்தனின் மேலா மோரோர் தேராளோ
டரசர் நூற்றுவர் நேர்போர் மீள்வார் போர்போதா
திரிய வேற்றெதிர் தேரூர் பாகா தாலேலோ
வேதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. ங.

26. பரவு காட்டிய நாவோ டேகூர் நோவோடே
பணிசெய் பொற்கிரி கோண்மா மீன்வாய் வீழாமே
வரவு காட்டு முராரீ மேவார் நேரே தூண்
வயிறு வாய்த்த பிரானே தாலோ தாலேலோ
யரவு காட்டிய தேரோ னேழ்பா ராளாமே
யருண னோட்டிய தேர்போய் மேல்பால் வீழாமே
யிரவு காட்டிய மாலே தாலோ தாலேலோ
வேதிரி லாப்பெரு மாளே தாலோ தாலேலோ. ச.

27-32. * * *

33. ....

....

பேணும் புவியாள் பூணுங்கடவுட் பெருமங் கலநாணின்
றிருவாய் ரவியாய் மதியாய் நதியாய் மறையாய் மனுநூலின்
செயலா யமுதப் புயலா யியலா யிசையா யொருதெய்வத்
தருவா யுதவுஞ் செங்கோ லுடையாய் தாலோ தாலேலோ
சயவா ளரியே வயவா ளபயா தாலோ தாலேலோ. யக.

தாலப்பருவம் முற்றும்.

ச. சப்பாணிப் பருவம்

34. கடலென மலையென மழையென வருவது
பற்றிய வித்தானை
கசரத துரகத நடுவிடை யறவிடை
யொப்பன வப்பாதி
யுடன்மலை படவொரு திகிரியை விடுதலின்
விக்ரம முக்கூடல்
ஒருதனி முதுகிட வருமவன் வழிமுதல்
கொட்டுக சப்பாணி
வடமது ரையிலொரு புடையிடை வனிதையர்
மெய்க்கவின் மைக்காவின்
வயிறற மணியுக வரிவளை யுடனணி
பொற்றொடி சிற்றுடை
கொடிமறு கடையவு மொளிபெற வருமுகில்
கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர
கொட்டுக சப்பாணி. க.

35. இடையிடை சுனைகுடை வரையர மகளிர்கள்
கச்சரி பச்சோலை
யெறிதிரை நிரைதரு விறுவரை யிசையென
புத்தகின் முத்தார

மடையவு மடைபரி யடைவன கதிர்முதிர்
நெற்பனை கற்பூர
மளிமுர லிசைவர மிசைவரு வனசில
பச்சிலை கச்சோல
முடைமது நதிதர வொழுகெழு தலைவன
முக்கனி தக்கோல
முடிநிரை பிறைவளை நெடுவரை தழுவிய
பித்திகை கத்தூரி
குடதிசை தரவிவை கொணர்தரு நதியிறை
கொட்டுக சப்பாணி
[1]குணதர சயதர குவலய தினகர
கொட்டுக சப்பாணி. உ.

36. இடிமுர செழுதிய கொடியுடை யொருதிரு
மைத்துனன் மெய்த்தூதா
வெழுகட லெழுகிரி யெழுபொழி லெனவிவை
சுற்றிய பற்றுளா
வடியினி லிருமுரு டொருபொரு களிறடு
மற்புத மற்போரா
வழகிய பொதுவிய ரகில்கமழ் துகில்பல
பற்றிய சிற்றுயா
பொடிவிடு புரவியி னெதிர்பொரு
மதிரத ருட்கிய முட்கோலா
பொருமிரு சிறகரி லிணையெழு புவனமு
முட்படு புட்பாகா

(பிரதி)—1. குணர்தரு.

கொடிவிடு மீனவன் தொடியொளிர் தளிர்கொடு
கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர
கொட்டுக சப்பாணி. ௩

37. உடைபுர வழுதியர் வனசரர் கடைதொறு
முய்ப்பன கைப்பாளை
யுழைமுழு வரிகொடு கருநடர் குலபதி
தைப்பன குப்பாய
மடையவு [1]முதகையி லவனிபர் குடபுவி
யொப்பன வுற்பாத
மருமறை யவர்பதி மறுகுக டொறுமுகில்
முட்டிய பட்டாடை
யிடைதரு சனகரு மகதரு மிடருற
விட்டனர் கட்டாண்மை
யிகலிட விவனது பரமில மெனமத
மிக்கன திக்காளை
குடைநர பதியிவன் மரபென வருமுகில்
கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர
கொட்டுக சப்பாணி. ௪

38. பரவரு மதலைகள் மதகரி சொரிவன
வெத்துறை யெத்தீரம்
பணிலமும் வளைகளு மொளிர்திரி வனவன
மெக்கழி யெக்கான
மிருபொழு தினுமெழ விருநதி தருவன
வெப்படை யெப்பாகை

(பிரதி) 1. முதுகையி.

யிருகனி களுமிள நறவமு முமிழ்வன
வெப்பனை யெப்பாளை
பரதவர் வனிதையர் மதர்விழி நிகர்வன
வெக்கய லெக்காவி
படுகொலை மதனனு மகளிரு மகிழ்வன
வெச்சுழ லெச்சோலை
குரைகட லெனவொலி மிகுமுத கையர்பதி
கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர
கொட்டுக சப்பாணி. ரு

39. தடிநற வறவிறல் மறலிதன் விடுகவர்
நெட்டிலை விட்டேறு
தலையற யமனொடு [1]தனிபல திசைசுழல்
கொட்பெரி கட்பூணி
மடிதர வுலகினி லுயிர்தொறு முயிர்தொறு
மெய்ப்புடை கைப்பாசம்
வருபிணி துணிபட வரைபுரை கருநடர்
நெட்டையர் கெட்டோட
வடிநிப வனிதையர் பெறவொரு குடிநிழல்
வைப்பன வொப்பாரு
மணிபெற வெழுதிய வழகிய குரைகவி
னுட்செறி மட்சாடிக்
குடிபுக முடிபுனை சுரகுரு வழிமுதல்
கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர
கொட்டுக சப்பாணி. சா

(பிரதி) 1. தணிபல

40. அறைபடு துகிரியி னலைகட லிருள்கெட
விட்டெறி வட்டான
மலம்வரு பொழுதினி லரசொடு முரசொடு
முட்டிய செட்டூரி
லிறைபட வவனெயி லெழவிடு முனைமதில்
குத்திய புத்தூரை
யெரியிட முனிவொழி யிரவிதன் வழிமுதல்
கொட்டுக சப்பாணி
யுறைபடு தடமுலை மணியிதழ் புகவொரு
கைத்தரு மெய்த்தாதி
யுயிரொடு பொதுவிய ரொழுகொழு குறிமிசை
வைப்பன செய்ப்பானை
குறைபட வொருவிசை யமுதுசெய் திருமுகில்
கொட்டுக சப்பாணி
குணதர சயதர குவலய தினகர
கொட்டுக சப்பாணி. எ

வேறு

41. அன்று கவிக்கு வியந்து நயந்து
தரும்பரி சிற்கொருபோ
ராழியில் வந்து தராதல நின்று
புகாரி லணைத்துலகுஞ்
சென்று கவிக்கு மகத்தது தூண்வயி
ரத்தினு முத்தினுமெய்
செய்ததொர் பொற்றிரு மண்டப நல்கிய
செயகுல நாயகமே

நின்று கவித்த தனிக்குடை வானவர்
ஞால நிரந்தரனே
நிற்ப நிறுத்திய கற்பெரு மாரி
மறித்தவ னெஞ்சுபுகக்
குன்று கவித்த திருக்குல நாயக
கொட்டுக சப்பாணி
குஞ்சர வல்லப வல்லபை வல்லவ
கொட்டுக சப்பாணி. ௮

42. மறிப்ப மறிந்துகு மல்லர ணப்பொறி
வில்லர ணத்தினர்தாம்
வஞ்சியை விட்டிக லஞ்சிய கோதை
மகோதை மதிற்கதவம்
பறிப்ப வெழிற்பதி னெண்சுர மும்பொடி
யாமடி யப்பெயரும்
பண்டித சோழன் மகற்கு மகன்பெறு
மன்னவர் மன்னனே
வெறிப்ப வளக்க வுடுக்கள் சுழிப்ப
வடுக்கரு டுக்கரெலாம்
வெள்ள நிலந்துகள் கொள்ள விலங்கிய
கவுரவர் வெம்முனையிற்
குறித்த வலம்புரி கொண்ட கரங்கொடு
கொட்டுக சப்பாணி
குஞ்சர வல்லப வல்லபை வல்லவ
கொட்டுக சப்பாணி. ௯

43. வண்ட லிழைப்பவர் மவ்வலு முல்லையு
மொல்லை வளம்படவும்
வானமும் வானு மகசுர ரும்சுர
ரும்பெரு வாழ்வுறவுங்

கண்ட னிரைக்கரை வாருதி யிற்கதிர்
முத்த முகந்தெழவுங்
காவ லிலங்கை விலங்கல் கிழித்திருள்
கால்மணி கைப்படவுஞ்
சண்ட லகைப்புகை சூழ்விழி நாகப
ணமணி கைவரவுஞ்
சார விலங்க லிடுக்கு மிடைக்கிடை
யாய்வயி ரந்தரவுங்
கொண்டல் பிணித்த திருக்குல நாயக
கொட்டுக சப்பாணி
குஞ்சர வல்லப வல்லபை வல்லப
கொட்டுக சப்பாணி. ௰

44. ஆலின் முகிற்றொகை யண்ட மகண்டமு
நிற்கநி றுத்தியதற்
கப்புற மேகலி குப்புற நூறி
[1]யதற்கென வம்மனுநூல்
வேலி யமைத்தவன் மன்னவர் மன்னவன்
மேதினி யாள்கணவன்
விக்ரம சோழன் வரைத்திரு மார்பில்
விளங்கு கவுத்துவமே
காலி புரத்தெதிர் முன்னை யுகத்தெதிர்
பின்னையு நிற்கநிரைக்
காவலர் முன்சில கோவலர் விட்டமு
மதக்களி றேழுடையாய்
கோலி யணைத்த துணைப்பது மங்கொடு
கொட்டுக சப்பாணி
குஞ்சர வல்லப வல்லபை வல்லப
கொட்டுக சப்பாணி. ௰க

சப்பாணிப் பருவ முற்றும்.

(பிரதி) 1. யதற்கென்றே.

ரு. முத்தப் பருவம்.

45. எழுது மதலையர் பரத ரினநிரை
யனைய பனையன நச்சரா
வெயிறு கதுவிய தனைய கடுநற
மிசைய வரியது [1]நெற்குவால்
விழுது நுகமிடு பகடு தலநடு
கடையர் கடைசியர் பச்சிறுல்
விரவு பொரியலொ டயிலு மளவொரு
மளவர் மகளிரு மொக்கலோ
டுழுது வருமவர் பணில வனமடு
வுமிய விடுமணி பத்திடா
வுமிழு நிலவெழ வளலை தரமிட
றுடைய வனமது முத்திடா
முழுது மணியெழ விலைகொ டுரகையர்
முதல்வ பணிமணி முத்தமே
முருக நிருபம வபய ரவிகுல
திலக பணிமணி முத்தமே. க

46. பகலு மிருளொடு முனையி லயிலொடு
பயிலு மதுரையர் கொற்றவா
பவன கதியிலு முடுக ரதம்விடு
பழைய வலவரி னுத்தமா
வகில நினைவொரு தொடையல் வரைதரி
னகர தசமறு மத்தனு
ணெடியர் பலர்கரு குவர நடுநடு
வுவரு மொரு நித்ததா

(பிரதி) 1. நிறகுவால்.

வகில பதியொடு பொருத குருபதி
விசய னெருதிரு மைத்துன
வதிரு முதுகடல் கமல மகள்விடு
மரசு பணியணி யச்சுதா
முகிலி னிருள்சுருள் வளைய முகமலர்
நடுவு பணிமணி முத்தமே
முருக நிருபம வபய ரவிகுல
திலக பணிமணி முத்தமே. உ

47. அதிரு முகிலணி குடக விரிகரி
ககன வெளிகெட வைத்ததே
னடவி யிழுதொடு தயிரொடு...நிரை
யமுத முலைமடை விட்டபால்
எதிரி யகல்வய லுழவ ரிசைபடு
படுக ரிடையிடை விட்டவா
திருளு மதுவென முழுது மளிகுல
மிரிய வினமட லுக்கசா
றுதைகொள் வப்படு கலுழி யிவையிவை
யொழுக வெழுமடி தித்தியா
வுடைய விறகட லுடைய வொருதனி
யுவரி யுவர்வரு முப்புநீர்
முதிய பரவையி லருளு முகநதி
முதல்வ பணிமணி முத்தமே
முருக நிருபம வபய ரவிகுல
திலக பணிமணி முத்தமே. ங

48. ஒழுகு பெருநதி யுவரி சிறிதென
வுமிழ வொருபனை வெட்டின
னுலக முழுதினி யிவன தெனவிம
கிரியி லொருபுலி யொட்டின

னெழுவி னுயர்புய வலியி னொருதிரு
நதியி னிருகரை கட்டினு
னிவனை யனையவ ரெவர்கொ லெனவரு
மிறைவ னுயிர்பொரு முக்கணு
னிழிவர் நுதலியர் விரவு கரிகளி
னிரவு பறையறை கச்சவா
யெயிலு மகழியு நறவு நதிகளு
நிறைய விடுதளை பத்துநாண்
முழவு மழைதர வருளு நரபதி
முதல்வ பணிமணி முத்தமே
முருக நிருபம வபய ரவிகுல
திலக பணிமணி முத்தமே. ௪

49. அடியர் கனைகழ லதிர வடபுவி
யரசர் பொரவரு முட்டநா
டழிய வெதிரிடு வடுகு முழுவது
மழிய வமர்பொரு கட்டிமான்
மடிய மறலிய தயிலன் வழியற
மகதன் முதுகிட மச்சர்கோன்
மலையு மிதுலையு மதிலு மிதிபட
மலைய குலபதி யுச்சிபோ
யிடிய விமகிரி யெழுது வரிசிலை
யுதியர் குடபுல வெற்புவே
ரிளக விகலிய வருண னுரமிரு
பிளவு படவெறி கொற்கையோன்
முடிய முனிவொழி யிரவி செயதர
முதல்வ பணிமணி முத்தமே
முருக நிருபம வபய ரவிகுல
திலக பணிமணி முத்தமே. ௫

50. தனையர் பலரொடு தயிலன் மகன்மகன்
மகனு மனிகமு முட்டநேர்
சரிய வடபுல மெரிய மலைநிலை
தளர வருதமிழ் விற்குழா
மெனையர் சிலர்பலர் வெருவ விமையவர்
பரவ விருசுடர் தப்புவா
யெரிய வறுகுறை செறிய வுடலுகு
குருதி நதியெதிர் செக்கர்வா
னனைய களனிடை யிலகு திகிரிக
ளிளக முதன்முதல் கற்றவா
ளளவு முதுகிரி.........பட நடு
வருவி வரைபுரை மத்தமா
முனையி னடவிய குரிசில் செயதர
முதல்வ பணிமணி முத்தமே
முருக நிருபம வபய ரவிகுல
திலக பணிமணி முத்தமே. சா

51. பழியி லிசைவன பருவ மழைமுகி
லுருமு வகைசெறி கொற்றவா
பவன கதியினு முடுக ரதம்விடு
பழைய வலவரி னுத்தமா
வழியு மெழுகடன் மலையர் மகளொடு
வடிய விடுமெழு கொட்டிநீர்
மலரு மெழுபொழில் வரையின் மகளிரொ
டினிது மகிழ்தர வைத்தகார்
விழியின் வழிவர வொழியும் வடபுல
விருத ரணிவிழ வெட்டியாள்
விபுத குலகிரி முழுது மெழுதிய
விசய வலிபெற நட்டதூண்

மொழியி லிவனெதி ரெவன்கொ லெனவரு
முதல்வ பணிமணி முத்தமே
முருக நிருபம வபய ரவிகுல
திலக பணிமணி முத்தமே. எ

வேறு

52. கருநடர்து ருக்கர்வட கவுசலர்கு குத்தர்விடு
கவுரியர்ம கதத்தர் பிறர்சூழ்
கடலெனவ ளைத்தமரர் ககனதல முட்டவொலி
களிபெருக ளத்தி னிடையே
துரகரத வர்க்கநிரை விரைவனது வைத்துவரு
துடியடிய ளக்கர் நிரையே
துணிபடுபி றக்கநடு வொடிமடிம ருப்பிணைகள்
சொரிகுருதி முத்த நினையோ
முரசையன கொற்கையன வுதகையன கச்சியன
வொழுகுமணி முத்த நயவோ
முதையகிரி யத்தகிரி யிமயகிரி சக்ரகிரி
யுதிரும்வெதிர் முத்த முகவோ
மருநதியு மக்கடலு மவன்மடிவு மெய்ப்புயலு
மருள்விளையு முத்த முகவோ
மரகதநி றத்தபய மனுசரித சக்ரதர
மதலையிதழ் முத்த மருளே. அ

53. ஒருபனைப ழுத்துதிரு மொழுகுகனி பொற்கனியி
லுலகிடர் கெடுத்த தறிவோ
மொருபனைகி ழித்ததனி லுவரிசிறு கப்பெருக
வொருநதி வகுத்த தறிவோ

முருகுகமழ் கச்சிபுக முழுவதும்வி ளக்கவிதி
முறைமையி லழித்த தறிவோ
முழுகுலங திக்கரசர் முடிகொடுவ குத்தகளை
முகிறெடவ மைத்த தறிவோ
மிருபுறமு மொக்கநின தொருபுலிபொ றிக்கவட
விமகிரிதி ரித்த தறிவோ
மிகன்முகரி முக்கணினு மொருகணிழி யக்கிழியி
[1]லெ[ழுது]கண ழித்த தறிவோம்
வருகலிவி லக்குவன விவையிவைகொ டுத்தகதை
வழிவழிபி டிப்ப தறிவோ
மரகதநி றத்தபய மனுசரித சக்ரதர
மதலையிதழ் முத்த மருளே. ௬

54. வெருவருமு கக்கடல்கள் வரவரவி ருக்கவயன்
விரைதரும லர்க்கை தருவோம்
[2]விடமொழிய வெப்பொழுது மமுதுகடை யக்கடைய
விரைவதொ ரளக்கர் தருவோ
முருமெனமு ழக்கமெழு முருகியம ழைக்கதிர்வ
சிறுபறையு தத்த தருவோ
முருகவடி வித்துவிழ வெளிறுரைதி றக்கடவு
ளுருகெழுக லப்பை தருவோ
மருநடந டித்துநின தறிதுயில றத்திசையி
னரவரசி னுச்சி தருவோ
மழகொடுதி ருக்கைவளை திகிரிகளி னெப்புடைய
வலகதிர ரட்டை தருவோம்
வரிசையின ளித்தருள வளைகளெறி கச்சியினின்
மறைநிதிவெ றுக்கை தருவோ
மரகதநி றத்தபய மனுசரித சக்ரதர
மதலையிதழ் முத்த மருளே. ௰

(பிரதி) 1. லெ.....கணமழித்த. 2. விடைமொழிய.

55. துளவுகம ழத்தழுவு முறைபுகுது றைக்குமரி
குலசெழியர் தத்தை பெறுவாள்
சுரருலக மெட்டுமது தொழுகுலம்வி ளக்கவரு
துறைகெழுகி ழத்தி பெறுவா
ளிளநிலவெ றித்தனைய முகிணகையி ழைத்தெரிவை
யெழுபுவன மித்ரை பெறுவா
ளிருளறவ ளைத்திலகு திகிரியிலி டத்தனுவி
லினிதமரு நித்தை பெறுவா
ளளவிறலை பெற்றபிளை தமிழ்முளரி தழ்த்தவிசி
லலகில்பரி சுத்தை பெறுவா
ளலைகடல்கு ளித்தபொழு தழகியபு யத்திலெழு
பரிமிதைவி தத்தை பெறுவாள்
வளவளவி றப்பெரிய பாவையக லத்துமகிழ்
வளர்சகர முத்தை பெறுவாள்
மரகதநி றத்தபய மனுசரித சக்ரதர
மதலையிதழ் முத்த மருளே. ரு௫

முத்தப் பருவ முற்றும்.

---

௬. வாரானைப் பருவம்.

56. முறுகிய கலியு முரணிய வரசு
முகமலர் கருக வருகவே
முளரியின் மகளு முழுநில மகளு
முறைமுறை பெருக வருகவே
குறுகிய பகைஞர் குருதியை நினது
கொடுவரி பருக வருகவே
குடையுட னிகலு குளிர்மதி பழைய
குரைகடல் செருக வருகவே

யிறுகிய மகர மிடையிடை துணிய
வெழுபெரு வயிறு மெயிறுமே
யெறிசெறி புகழ விடுசுடி கைமினி
லெழிலியு மிரிய விரியல்போய்
மறுகிய வருணன் வழிபட முதுகு
வளைசிலை யபயன் வருகவே
மனுகுல திலகன் ரவிகுல திலகன்
மகன்மகன் வருக வருகவே. க

57. இரைகவர் மகர மதிநிழல் கதுவ
வெறிகடல் கதுவு துவரைவே
ளிலைமுளி யுமிழ்வ புரைபுரை மறையி
லிடுதுடர் பறியு மெழிலியோ
னுரைவளர் நிலவு முபனிட மருளு
முலகறி பிறவி யுடையசே
வுடைய விவனியி னுடுபதி மரபி
னுறுமவன் மருகன் வருகவே
யரவர மகளி ரெழுபுட வியினும்
வருமொரு பவனி யயரவீ
தகமகிழ் பொழுது புனலர மகளி
ரெழுகடல் களினு மிரியவேழ்
வரையர மகளிர் மனைதொறு மறுகி
மனமுழு தருக வருகவே
மனுகுல திலகன் ரவிகுல திலகன்
மகன்மகன் வருக வருகவே. உ

வேறு

58. உயிரில்கரு நாட ருடல்கணட மாட
வுரகர்பகு வாயி னுரிமையோ

டுதியர்குதி பாய வுதகையெழ வேவ
வுவரிதிரை தீய வுடலினோர்
செயலில்குண வாயி லுடையவிழி வால
வடையமலை நாடு வகையிலே
சிதையமுனி வாறு மிரவிதன தாதன்
மருகசெக தீரன் வருகவே
யயரின்மணி வீதி யசுரர்புர மேரு
வனையதொரு தூணி னிடையெழா
வவனிமுத லாய வுலகுபதி னுலு
மரசுதனி யாளு மவுணர்கோன்
வயிரவரை யாக நடுவுபிள வாக
வகிருமுகி ராளி வருகவே
மலையமலை வாண னிமயமலை யாளி
வளவனக ரீசன் வருகவே ௮

59. தகரமண நாறு தொடையல்வட நாடர்
பொருதுகுட கூட லமரிலே[1]
தரணிதர வேறு முடையகவி ராசர்
பரணிதர மீது தனிமைகூர்
சிகரவட மேரு கிரியைமதி யோடு
நளினபதி யோடு மிகலியோர்
திகிரிவர வேவு குரிசில்கரி காலன்
மருகசெக தீசன் வருகவே
பகரவுயர் சூத பனசபல வேரி
வனசநற வோடு பருகவே
பகடுபடு வான முகடுதொட வாவு
பரியபெரு வாளை வயல்புகா

(பிரதி)—1. குடல் கூட றமரிலே

மகரலய வேறு பலவுமிக மூரி
வலியதிரு நாடன் வருகவே
மலையமலை வாண னிமயமலை யாளி
வளவனக ரீசன் வருகவே. ௬

60. கடலுடைய பூமி முழுதுமொரு நேமி
கறவுபகை தீர நிறுவியே
ககனநெறி யூடு கவரியிரு பாலு
மசைவசைய வோரு கவிகையோ
டடலுடைய தானை யமரர்புடை சூழ
வரமகளிர் பாட வவுணர்மே
லடர்விழிய னேக முடையவிடை யூரு
மரசன்வழி வீரன் வருகவே
படலுடைய வாயில் பயின்மதகு காவ
லழகுகுலை வாணர் மறைபோரு
பதபதென மேதி படுகர்விட வாவி
படியில்வெடி போய பருவரான்
மடலுடைய பூக வனமிடறு நூறி
வரவுகளு நாடன் வருகவே
மலையமலை வாண னிமயமலை யாளி
வளவனக ரீசன் வருகவே. ௫

61 விடுவேடுவு மீன விசையமுடி சூடி
யரசுதனி யாளு மறுமையோர்
விளைவொழிய வான மழைபொழிய வேத
விதிவளரு மாதர் விலையில்பூ
ணடுநடுவு கூரு மிடரொழிய ஞால
மடையவிடர் தீர வருளினு

னபயன்மது ரேச னுபயகுல தீப
னகிலகலி கோபன் வருகவே
நடுநடுவு நேயர் மகளிரொடு ஞாள
நளினவள வாவி நதிகளா
னலிவுபடு வாளை முதுபகடி ராகு
வருவதென வாவு நதியதோர்
மடுநடுவு லாவ வடுநதிவு போது
மதிவெருவு நாடன் வருகவே
மலையமலை வாண னிமயமலை யாளி
வளவனக ரீசன் வருகவே. ௬

62. திருடுபோருண் மூகர் பழையமொழி யாளர்
வெளியரிள நீர ரிளமையே
திகழுமொழி யாத ரிவர்களொரு நால்வர்
சிறிதுமறி யாது பரர்களே
நெருடுவன தீர நிகரில்கவி ராச
னிலவுகவி மாலை குலவுதோ
ணிருபன்மகன் மோக னடனடவி நோத
னிருபகுல தீபன் வருகவே
முருடுபடு மூரி யகிலின்முகி லேறி
முரலுமுது நேரி முதுகின்மேன்
முறுகுவன சோதி குறுகுவன கூசி
முருகுகமழ் சார லருகுபோய்
வருடைகுதி பாய நடவுநதி தோறு
மதிதிடறு நாடன் வருகவே
மலையமலை வாண னிமயமலை யாளி
வளவனக ரீசன் வருகவே. ௭

63. [1]குறுகுகழல் வீரர் பொருதுபடு மீழ
முடையவெழு நூறு மடையமீ
குடறுதிரை நீரின் முதியகட லூடு
புதியகடல் காணு மிரவிசூ
டறுகுசெறி கோடி யரசர்முடி தோறு
மணியுமபி டேக மணியதா
ளபயன்மது ரேச னுபயகுல தீப
னனுபமனு லோகன் வருகவே
முறுகுபுனை யேய களரிவிரி காள
முடியுநிலை பேறு வழுதிபோய்
முதியவரை யேறி யுரிமையுடன் வான
முகடுதொடு கோயின் முழுதுமே
மறுகுபல காண மதுரையெறி சோழன்
மதலைகலி கோபன் வருகவே
மலையமலை வாண னிமயமலை யாளி
வளவனக ரீசன் வருகவே. அ

வேறு

64. ஏறுமோரு பன்றியை நகங்கொடு துடக்கிய
திரண்டடி யிரண்ட டியிடா
வேழையெதி ரிட்டகயன் மீனையு மிடங்கரை[யு]
மள்ளிய வெயிற்ற லகுவா
யூறுபட நொந்துபிளி றிக்களிறு கவ்வியு
முறக்கியு முறுக்கி யுநிலத்
தூழிபல வந்துபகை மேழியையும் வீணையையு
